பக்கங்கள். ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 பங்குனி 23 ஞாயிற்றுக்கிழமை (05-04-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 139

# ஹமில்டன் - வைத்தியரத்னா இருவரும் கருத்து மோதல்!

## யாழ். மீது தாக்குதல் நடத்துவதா இல்லையா என்பதில் முரண்பாடு

கொழும்பு, ஏப்ரல் 5

யாழ்ப்பாணக் குடாநாட்டின் மீது பெரும் இராணுவத் தாக்குதல் ஒன்றை நடத்துவதா இல்லையா என்பது குறித்து அதி உயர் பாதுகாப்பு அதிகாரிகள் இருவரிடையே பெரும் கருத்து மோதல் ஏற்பட்டுள்ளதாக ஏஜன்சிச் செய்திகள் தெரிவித்தன.

யாழ். தாக்குதல் நடத்தப்பட்டால் பெரும் ஆட்சேதம் ஏற்படும் என்பதால் அதனைப் பின் போட வேண்டும், கடைசி முயற்சியாகவே மேற்கொள்ளப்படுதல் நல்லது — என்று கூட்டுப்படைகளின் தளகர்த்தர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா கருதுகிறார்.

ஆனால் இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரத்னா யாழ்ப்பாணத்தின் மீது தாக்குதலை நடத்தி அதனை இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர வேண்டும். விளைவை ஊகித்து நடவடிக்கையை நிறுத்தக் கூடாது என்ற கருத்துடையவராக இருக்கிறார்.

இவர்கள் இருவருக்குமிடையேயான முரண்பாடு காரணமாக யாழ். தாக்குதல் குறித்து இறுதி முடிவு எடுப்பது தாமதமடைந்து வருவதாகவும் அதே ஏஜன்சி செய்திகள் தெரிவித்தன.

இது குறித்து ஏஜென்சிச் செய்திகள் மேலும் தெரிவித்ததாவது ;–

இராணுவத்தின் நிலையைப் பார்க்கும் போது, ஆட்பலம், பொருள் வசதி, ஆயுதம் என 3 நிலைகளில் தன்னிறைவை அடைந்துள்ளது. ஆனால் தாக்குதலின்போது இராணுவத் தரப்பில் ஆட்கள் சேதம் அதிகம் ஏற்படும் என்றே பலரும் கருதுகிறார்கள்.

இதோ யாழ்ப்பாணத்தின் மீது எங்கள் இறுதித் தாக்குதலை நடத்தப் போகிறோம் என இராணுவம் அச்சுறுத்தி வருகிறது. இராணுவம் தாக்கினால் அதற்கான பதிலடியும் எதிர்பாராத விளைவாக இருக்குமென புலிகள் கூறி வருகின்றனர். ஆனால் இராணுவத்தினரின் யாழ்ப்பாணத்தின் மீதான தாக்குதல் தள்ளிக் கொண்டே போகிறது.

பேச்சுக்குத் தயாராக உள்ள

[6 ஆம் பக்கம் பார்க்க]

### கண்ணியில் சிக்கியது பஸ்!

கொழும்பு, ஏப். 5

திருகோணமலை மாவட்டத்தில் தனியார் பஸ் ஒன்று கண்ணிவெடியில் சிக்கியதில் ஒருவர் உயிரிழந்தார் என்றும், 7பேர் காயமடைந்தனர் என்றும் ஏஜென்சிச் செய்திகள் தெரிவித்தன.

புணாவ என்ற இடத்தில் நடந்த இந்தச் சம்பவத்தில் இறந்தவர் சிங்களப் பயணி என்று தெரிவிக்கப்பட்டது.

[ஒ-10]

### வவுனியாவில் 'கறுப்பு நரி' நடவடிக்கை

கொழும்பு, ஏப். 5

வவுனியா மாவட்டத்தில் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்ட இராணுவ நடவடிக்கைக்கு 'கறுப்பு நரி' (Operation Black Fox) என்று பெயரிடப்பட்டுள்ளது.

[ஒ-த]

### வடக்கிற்கான பரீட்சை முடிவு நாளை வரும்

கொழும்பு, ஏப். 5

கடந்த வருடம் டிசம்பரில் நடைபெற்ற ஜி. சீ. ஈ. சாதாரண தர பரீட்சை முடிவுகள் நாளை திங்கட்கிழமை வட பகுதிக்கு விமான மூலம் அனுப்பி வைக்கப்படும் இப்படி பரீட்சை ஆணையாளர் திரு. ஆர்தர் வெதமுல்ல தெரிவித்தார்.

[த]

### வல்வை நோக்கி ஷெல் தாக்கு

பலாலி இராணுவ முகாமில் இருந்து நேற்று அதிகாலை வல்வெட்டித்துறைப் பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஊரிக்காடு பகுதியில் ஷெல்கள் விழுந்ததாகவும் கூறப்பட்டது. சேத விவரம் எதுவும் தெரியவரவில்லை.

(ஒ-165-118)

### கடற்படை படகு சேதம்

மாதகல் கடற்பரப்பில் வைத்து நேற்று முன்தினம் இரவு கடற்புலிகள் நடத்திய தாக்குதலினால் ஸ்ரீலங்கா கடற்படைக்குச் சொந்தமான இஸ்ரேலிய தயாரிப்பு டோறா பீரங்கி படகு ஒன்று சேதமாக்கப்பட்டது.

படகை கடற்படையினர் அவசர அவசரமாக மீட்டுச் சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

[ஒ-5]

### மூவரைத்தேடி வேட்டை

கொழும்பு, ஏப். 5

ஹெரோயின் போதை வஸ்துக் கடத்தலில் ஈடுபட்டு வருவதாகச் சொல்லப்படும் மூன்று பேரைக் கைது செய்யும் முயற்சியில் கொழும்புப் பொலிஸார் தீவிரமாக ஈடுபட்டுள்ளனராம்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## புன்னாலைக்கட்டுவன் பகுதியில் இரு காவலரண்கள் அழிப்பு

### படையினர் இருவர் பலி; சிப்பாய் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், ஏப். 5

புன்னாலைக் கட்டுவன் பகுதியில் அமைந்திருந்த படையினரின் இரு காவலரண்கள் மீது நேற்று அதிகாலை விடுதலைப் புலிகள் அதிரடித் தாக்குதல் நடத்தி அவற்றைத் தகர்த்தெறிந்தனர். அவற்றில் இருந்த இரு சிப்பாய்கள் தாக்குதலின்போது உயிரிழந்தனர்.

கொல்லப்பட்டவர்களில் ஒருவரின் சடலத்தை எடுத்துக் கொண்டு அங்கிருந்த ஏனைய படையினர் தப்பி ஓடிவிட்டனர்.

மற்றைய சடலத்தையும் அவர்களிடமிருந்த ஆயுதங்கள் சிலவற்றையும் புலிகள் கைப்பற்றினர்.

ரீ-56 ரகத்துப்பாக்கிகள் — இரண்டு, அவற்றுக்கான மகஸீன்கள் ஐந்து, 150 நடுத்தர ரவைகள் என்பன புலிகளால் கைப்பற்றப்பட்டன.

[ஒ-5-165-15]

### வீரமரணம்

யாழ்ப்பாணம், ஏப். 5

புன்னாலைக்கட்டுவன் காவலரண்கள் மீதான அதிரடித் தாக்குதலின் போது கப்டன் கண்ணன் (தர்மலிங்கம் அம்பிகை பாகன்— சிறுப்பிட்டி வீரமரணமடைந்தார்.

அவரது புகழுடம்பு நேற்று தெல்லிப்பழை யூனியன் கல்லூரியிலும் சிறுப்பிட்டியிலும் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

[ஒ-5-165]

### மணலாறு, நாயாறு பகுதிகளில்

## விமானக் குண்டு வீச்சினால் காடுகள் எரிந்து நாசம்!

மணலாறு, நாயாறுப் பகுதிகளில் கடந்த சில நாட்களாக ஸ்ரீலங்கா விமானப் படையினர் கண்மூடித்தனமான தாக்குதல்களை நடத்தியதில் அங்கு பெரும் அனர்த்தம் ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

காட்டுப் பிரதேசங்களில் ஏராளமான எரி குண்டுகள் வீசப்பட்டதால், காட்டு வளம் பெருமளவில் பாதிக்கப்பட்டு விட்டதாகவும் பெரும் பிரதேசங்களில் பாரிய மரங்களும் எரிந்து நாசமாகிவிட்டதாகவும் அறியவந்துள்ளது.

இதனால் அனேக காட்டுப் பகுதிகள் வெளியாகிப் கிடப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

[ஒ-5]

## திருமலைத் தமிழர்கள் வெளியேறத் திடீர்த் தடை!

யாழ்ப்பாணம், ஏப் 5

திருகோணமலையில் படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் உள்ள தமிழர்கள் அங்கிருந்து வெளியிடங்களுக்குச் செல்வதைப் படையினர் தடைசெய்துள்ளதாக இங்கு தகவல்கள் கிடைத்துள்ளன.

அப்பகுதி மக்களுக்கு விரைவில் புதிய அடையாள அட்டைகள் வழங்கப்படும் என்றும் அதுவரை எவரும் வெளியே செல்ல அனுமதிக்கப்பட மாட்டார்கள் எனவும் இராணுவம் தெரிவித்துள்ளதாகவும் அறிய வருகிறது.

இதேசமயம் திருமலைக் கிராமப் புறங்களில் படையினர் திடீர், திடீரென தேடுதல் வேட்டையிலும் ஈடுபட்டு வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## பாடசாலைகள் நாளை முதல் விடுமுறைக்காக மூடப்படும்

### சில 10 ஆம் திகதி வரை இயங்கும்

யாழ்ப்பாணம், ஏப். 5

தவணைப் பரீட்சையை முடித்து மாணவர்களுக்கு தேர்ச்சி அறிக்கைகளை விநியோகித்த சகல பாடசாலைகளும் முதலாம் தவணை விடுமுறைக்காக நாளை திங்கட்கிழமை மூடப்படும். மீண்டும் இரண்டாம் தவணைக்காக எதிர்வரும் 27 ஆம் திகதி அவை ஆரம்பமாகும்.

வடபிராந்திய கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் நேற்று இவ்வாறு அறிவித்துள்ளார்.

இதேவேளை—

முதலாம் தவணைப் பரீட்சையை இதுவரை நடத்தி முடிக்காத பாடசாலைகள் பரீட்சையை நடத்தி தேர்ச்சி அறிக்கைகளை வழங்கிய பின்னர் எதிர்வரும் 10 ஆம் திகதி மூடப்பட்டு மே மாதம் 4 ஆம் திகதி மீண்டும் திறக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[6ஆம் பக்கம் பார்க்க]

### முச்சந்தி முரளி



[illegible] இப்ப நரியின்ரை நிலைக்கு வந்துவிட்டது போல!

## ரஞ்சன் கொலை விசாரணை; பிரிட்டிஷ் நிறுவனம் நடத்தும்

லண்டன், ஏப். 5

அமைச்சர் ரஞ்சன் விஜயரத்ன கொலை தொடர்பாக விசாரணைகள் நடத்த தனிப்பட்ட பிரிட்டிஷ் இரகசிய சேவை நிறுவனம் ஒன்றை எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் சிலர் ஒழுங்கு செய்திருப்பதாகத் தம்மை இனங்காட்ட விரும்பாத சில வட்டாரங்கள் தெரிவித்ததாக லங்கா பத்திரிகை ஆசிரியர் வினி ஹெற்றிகொட நேற்று பி. பி. ஸி. சிங்கள சேவைக்கு அளித்த பேட்டியில் கூறினார்.

இந்த பிரிட்டிஷ் இரகசிய சேவை நிறுவனத்தினர் அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்ததாகவும் —

இதே நிறுவனத்தினர் இந்தியாவின் போபர்ஸ் விவகாரம் பற்றியும் இந்திய எதிர்க்கட்சிகள் சார்பில் விசாரணை மேற்கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

விசாரணைகளுக்குக் குந்தகம் ஏற்படலாம் என்பதால் இச்செய்தியை வெளியிட வேண்டாம் எனத் தகவல் தந்த வட்டாரங்கள் தெரிவித்ததாகவும் எனினும் தாம் தமது இந்த வார இதழில் இதனைப் பிரதான தலைப்புச் செய்தியாக வெளியிட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சி சேவையின் சிலபதவிகள் மத்திய அரசுடன்

## திருத்தங்கள் விரைவில் வரும்

யாழ்ப்பாணம், ஏப். 5
அதிகாரப் பரவலாக்கலை அர்த்தமுள்ளதாக்குவதற்கு, அதனை அமுல் செய்வதற்கு முன்னோடியாக உள்ளூராட்சி சேவையின் சில நிர்வாகப் பதவிகளை மத்திய அரசாங்க பொதுச் சேவையுடன் இணைப்பதற்கான சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகளை பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் அமைச்சு செய்து வருகிறது.

பிரதேச செயலகங்களை உருவாக்கி அவற்றுக்கு அரச அதிகாரிகளை நியமித்து அதிகாரப் பரவலாக்கலை நடைமுறைப்படுத்தும்போது, உள்ளூராட்சி சேவைகளையும் அவற்றோடு இணைத்துச் செயற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அதன் பொருட்டே உள்ளூராட்சி சேவையின் சில பதவிகளை அரசாங்க நிர்வாக சேவைகளுடன் இணைக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாக அறியவருகிறது. அதற்கான விதிமுறைத் திருத்தங்களைச் செய்வதில் இப்போது பொது நிர்வாக அமைச்சு அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர். [அ-3]

# ஆலய உற்சவம்

யாழ்ப்பாணம், ஏப். 5
நல்லூர் பண்டாரக்குளம் மருதவளவு விநாயகர் ஆலயத் திருவிழாவையொட்டி யாழ். அண்ணாமலை இசைத் தமிழ் மன்றத்தின் இசை விழா அரங்குகள் விநாயகர் ஆலய இசையரங்கில் இன்று 5 ஆம் திகதி தொடக்கம் 16 ஆம் திகதி வரை நடைபெற உள்ளன.

இரவு 7-00 மணிக்கு தினமும் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்.

★ ★ ★

ஸ்ரீ அம்பலவாண வேத விநாயகர் கோவில் வருடாந்த மஹோற்சவம் இன்று காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். 13 ஆம் திகதி தேர்த் திருவிழா நடைபெறும்.

★ ★ ★

ஸ்ரீ சிதம்பர நடராஜ வீர சக்திப் பிள்ளையார் கோவில் மஹோற்சவம் இன்று காலை 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். ரதோற்சவம் எதிர்வரும் 13 ஆம் திகதி திங்கட்கிழமை காலை நடைபெறும்.

★ ★ ★

நல்லூர் வடக்கு சந்திர சேகரப்பிள்ளையார் கோவில் வருடாந்த மஹோற்சவம் இன்று காலை 8 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

எதிர்வரும் 13 ஆம் திகதி புதுவருட தினத்தன்று தேர் உற்சவமும் மறுநாள் 14 ஆம் திகதி தீர்த்த உற்சவமும் இடம்பெறும். (-5)

★ ★ ★

தெல்லிப்பழை, ஏப். 5
உடுவில் ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் சுவாமி தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் நாளை திங்கள் ஆரம்பமாகவுள்ளது. [ஒ-68]

★ ★ ★

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, ஸ்ரீ ஞான வைரவ சுவாமியின் 4 ஆவது ஆண்டு குடமுழுக்குத் தின சங்காபிஷேகம் நாளை திங்கட்கிழமை மாலை 5.00 தொடக்கம் செவ்வாய்க்கிழமை காலை 7.00 மணிவரை நடைபெறவுள்ளது. [இ]

★ ★ ★

யாழ்ப்பாணம், ஏப். 5
தொல்புரம் மத்தி கொட்டடிப்பதி அருள்மிகு ஸ்ரீ ஆதி முத்து மாரி அம்பாள் கோவில் வருடாந்த குளிர்த்தித் திருவிழா இன்று மாலை 4-30 மணிக்கு நடைபெறும். [ஒ-30]

## தபாலக அணி வெற்றி

யாழ்ப்பாணம், ஏப். 2
யாழ். மக்கள் வங்கி அணிக்கும் யாழ். தபாலக அணிக்கும் இடையில் அண்மையில் இடம்பெற்ற 20 ஓவர் மட்டுப்படுத்தப்பட்ட மென்பந்துக் கிரிக்கெட் போட்டியில் யாழ். தபாலக அணி 4 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

அரியாலை காசிப்பிள்ளை அரங்கில் இந்த ஆட்டம் நடைபெற்றது. (த)

### பாக்கு நீரிணையில் மீன்பிடிக்கும்

# இருநாட்டு படகுகளையும் பதிவு செய்வதற்கு இணக்கம்

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பாக்கு நீரிணையில் மீன் பிடிக்கும் இருநாட்டுப் படகுகளையும் பதிவுசெய்வதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இலங்கை சுங்க அதிகாரி லலித் ஹின்சமவும், இந்திய சுங்க அதிகாரி வி. கே. சர்மாவும் கொழும்பில் நடத்திய பேச்சுவார்த்தையின் பின்னர் இம்முடிவு எடுக்கப்பட்டது.

மேலும் இரு நாடுகளாலும் குற்றவாளிகளாகக் கருதப்படும் கடத்தல்காரர்களின் புகைப்படங்களைப் பரஸ்பரம் பரிமாறிக் கொள்வது எனவும்—

உடனுக்குடன் தொடர்பு கொள்ளத்தக்கதாக ''ஹொட்லயின்,' தொலைபேசித் தொடர்பு ஏற்படுத்துவது எனவும் முடிவு செய்யப்பட்டது. [இ-10]

# கூட்டுறவு ஊழியர் நேற்று அடையாள உண்ணாவிரதம்

சுழிபுரம், ஏப். 5
அன்னை பூபதி நினைவையொட்டி நேற்று வழக்கம்பரை அம்மன் கோவில் முன்றலில் கூட்டுறவுச் சங்க ஊழியர்களின் ஒருநாள் அடையாள உண்ணாவிரதம் நடைபெற்றது.

சங்கானை ப. நோ. கூ. சங்கம், காரைநகர் ப. நோ. கூ. சங்கம், பண்டத்தரிப்பு ப. நோ. கூ. சங்கம் ஆகியவற்றைச் சேர்ந்த நிர்வாகிகள், ஊழியர்கள் இந்த உண்ணாவிரதத்தில் கலந்து கொண்டனர்.

இந்த உண்ணாவிரதத்தையொட்டி வழக்கம்பரை, சுழிபுரம் கூட்டுறவுச் சங்கக்கடைகள், மூடப்பட்டிருந்தன.

# விடைத்தாள் திருத்த வேலை இம்முறையும் கொழும்பில்

யாழ்ப்பாணம், ஏப். 5
''தற்சமயம் நடைபெற்று வரும் ஜி.சீ.ஈ. (உயர்தர) விசேட பரீட்சை விடைத்தாள்களை திருத்த, அதில் அனுபவம் உள்ள ஆசிரியர்கள், கொழும்பு வரவேண்டும். அவர்களுக்கு சகல உதவிகளும் வழங்கப்படும்.''

பரீட்சை ஆணையாளர் ஆர்தர் வெதமுல்ல இவ்வாறு தெரிவித்துள்ளார்.

யாழ். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 14 பேராசிரியர்கள் இந்தப் பரீட்சையின் தரம் குறித்து சமர்ப்பித்த மகஜருக்குப் பதில் அளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

கலைப்பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை இந்த மகஜரை பரீட்சை ஆணையாளரிடம் சமர்ப்பித்தார்.

கொழும்புக்குவரும் பரீட்சகர்கள் தங்குவதற்கான வசதிகள் குறித்தும் அவர்களுக்கு கூடுதல் கொடுப்பனவுகள் வழங்குவது குறித்தும் பரீட்சை ஆணையாளர் உறுதி அளித்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. [த-3]


"வீமா"

வர்த்தக ஸ்தாபனங்கள், பாடசாலைகள், சனசமூக நிலையங்களுக்கு வேண்டிய றபர் ஸ்ராம்புகளை சிறந்த முறையில் பெற்றுக்கொள்ள......

"வீமா"

ஆனைப்பந்தி சந்தி அருகாமையில்.
நாவலர் வீதி, யாழ்நகர்.

(20362)



தாதிப் பயிற்சி நெறி
Training For Nurses

1. தாதியர்களுக்குரிய சகல பாடத்திட்டங்களும் உள்ளடக்கப்பட்டது.
2. உள்நாட்டு, வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்கு உரியது.
3. மாவீரர், போராளிகள் குடும்பத்தவர்களுக்கு இலவசக்கல்வி, இலவச தங்குமிடவசதி.

ஆரம்பம்: 19-04-1992

அதிபர்,
சாயி மெடிக்கல் அக்கடமி,
இல. 6, பருத்தித்துறை வீதி.
1 ஆம் ஒழுங்கை (மக்ரவல்ஸ் அருகில்),
யாழ் நகர்.

(சி/1817)



உங்கள் தேவை
எங்கள் சேவை

உங்களின் முக்கிய தேவைகளான

★ தேசிய அடையாள அட்டை (N. I. C.)
★ கடவுச் சீட்டு (Pass Port)
★ தபால் அடையாள அட்டை (Postal I. C.) ஆகிய கறுப்பு வெள்ளை புகைப்படங்கள் பிடிப்பதற்கும்,
★ விசேட வைபவங்களின் ஞாபகார்த்த கலர் புகைப் படங்கள் பிடிப்பதற்கும் (Outdoor & Indoor)
★ படங்களை பெரிதாக்குவதற்கும் (Enlargment)
★ கலர் படச் சுருள்கள் கழுவுதல் (Developing)
★ கலர் படச் சுருள்கள் கழுவுதலும் பிரதியாக்கம் செய்தலும் (Developing and Printing)
★ மற்றும் கலர் கறுப்பு - வெள்ளை படச்சுருள்கள் (Film Rolls, and P. T. Battries)

ஆகியவற்றுக்கு

உங்களின்
நன்மதிப்பு பெற்ற ஸ்தாபனம்

ஞானம்ஸ் ஸ்ருடியோ
301, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

குறிப்பு; உங்கள் அவசர தேவைக்கு கறுப்பு-வெள்ளை புகைப்படம் சில மணித்தியாலயங்களில் வழங்கப்படும்.

[சி-17..]



A/L MATHS
Mr. குணசிங்கம்
B. Sc. (Hons.)
92 A/L
திண்மகேத்திரகணிதம்
இன்று ஆரம்பம்
05 — 04 — 1992
10-00 a. m.
Personal
New Science
Centre
JAFFNA.
[சி/18..]



விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

92 கலை, வர்த்தகம் பிரிவு 2

DAY CLASSES (8.00 — 3.00)

ஆரம்பம்:- 09 — 04 — 92 8.00 மணி

பொருளியல் — திரு. கலாகரன்
வர்த்தகம் — திரு. இரட்ணம்
கணக்கியல் — திரு. S. K. பிரபாகரன்
அளவையியல் — திரு. A. பிரபாகரன்

மற்றும் சகல பாடங்களும் நடைபெறும்.

மு. குறிப்பு:- எமது நிறுவனத்தில் மட்டுமே DAY-CLASSES சிறப்பாக நடைபெறுகின்றன.

(சி/1830)


# கண்ணீர் அஞ்சலி

## திரு. இளையதம்பி - நாகலிங்கம்

யா/கொக்குவில் - மேற்கு

யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரக் கல்லூரி கணக்கியல் ஆசிரியர் திரு. நா. வன்னியசிங்கம் அவர்களின் தந்தையார் திரு. இளையதம்பி - நாகலிங்கம் அவர்கள் 04-04-1992, சனிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 05-04-1992 ஞாயிற்றுக்கிழமை காலை 10-00 மணிக்கு நடைபெறும். அன்னாரது குடும்பத்துயரில் நாமும் பங்கு கொள்கின்றோம். எங்கள் கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

தகவல்:

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், ஊழியர்கள்,
யா/ வைத்தீஸ்வரக் கல்லூரி,
யாழ்ப்பாணம்,

ஆசிரிய நலன்புரிச்சங்கம்,
யா/ வைத்தீஸ்வரக் கல்லூரி. [20358]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்களக் குடியேற்றத்துக்கு குட்டி செயலகங்கள் உதவும்

## கிழக்கில் நிலைமை மோசமடையும்

யாழ்ப்பாணம், ஏப். 5
குட்டிச் செயலகங்கள் (மினிக் கச்சேரிகள்) என்றும், பிரதேச சபைகள் என்றும் அதிகாரப் பரவல் செய்வதாகக் கூறப்படுவது வடக்கு-கிழக்கில் சிங்களக் குடியேற்றங்களை மேலும் தீவிரப் படுத்தவே உதவும் —

இவ்வாறு விடுதலைப் புலிகளின் மக்களுறவுப் பிரிவு வெளியிடும் 'விழிப்பு' வாரப் பத்திரிகை சுட்டிக் காட்டி உள்ளது

இது சம்பந்தமாக அப் பத்திரிகையில் பிரசுரமான செய்தியில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

உதவி அரசாங்க அதிபர்கள் பிரதேசச் செயலாளர்கள் எனவும், அவர்களின் பணிமனை பிரதேசச் செயலகம் (மினிக் கச்சேரி) எனவும் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இது மிகச் சிறந்த ஒரு திட்டம் என சிங்கள அரசால் தொடர்ச்சியாக பாரிய பரப்புரைகள் செய்யப் பட்டு வருகின்றன. ஆனால் உண்மையில் இத்திட்டம் தமிழ் மக்களைப் பொறுத்த வரை மிக ஆபத்தான தொன்றாகும்.

அரசின் இந்த நடவடிக்கையினால் தமிழீழத்தின் எல்லைப் புறங்களில் சிங்களக் குடியேற்றங்கள் மேலும் அதிகரிக்கப்படவே வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தென் தமிழீழத்தின் பல பகுதிகளிலும், வவுனியா தெற்கிலும் உள்ள பல தமிழ்ப் பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்கள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவற்றையெல்லாம் அவ்வப் பிரதேசச் செயலாளர்களான உதவி அரசாங்க அதிபர்களே மேற்கொண்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

சிறிலங்கா அரசின் இந்த நடைமுறையினால் சிங்களப் பாதுகாப்பு அமைப்பு சுட்டிக் காட்டிய 9 பிரதேசங்கள் மட்டுமன்றி மேலும் பல பிரதேசங்கள் சிங்களவரைப் பெரும்பான்மையாகக் கொண்ட பகுதிகளாக மாறி விடக் கூடிய ஆபத்தே உருவாகி உள்ளது. குறிப்பாக எமது எல்லைப் பிரதேசங்கள் முழுக்க முழுக்க சிங்களவர்களால் நிர்வகிக்கப்படும் செயலகங்களைக் கொண்டதாக மாற்றப்படும் நிலையும், மேலும் வளம் மிக்க தமிழ்ப் பகுதிகள் தீவிரமாக சிங்களமயப்படுத்தப்படும் நிலையும் ஏற்பட்டு வருகின்றன—என்று உள்ளது. [ஓ]

---

## 75ஆம் நாள் வீர அஞ்சலியும் நினைவுகூரலும்



வீரவேங்கை
**சிவராம் கலைவேந்தன்**
**வ. குணதீஸ்வரன் (குணம்)**
[கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவன்]

அன்புப் புத்திரனாய்: 03 — 12 — 1973
மண்ணின் மாவீரனாய்: 21 — 01 — 1992
திதி: 05 — 04 — 1992

தாயக விடுதலைக்கென தன்னுயிர் தந்தவன் - நீ
தரணி போற்றும் புலி வீரன் மரபில் நின்றவன் - நீ
போரிற்கும் அஞ்சாத புலிக் காளை - நீ
போகும் வழி தோறும் அரிச்சுவடு தந்தவன் - நீ
பொங்கி வரும் கண்ணீரை புலி வீரனே - உன்
பெயராலே அணை போட்டு நினைவு கூரும்

தாய் சகோதரர்கள்,
உறவினர்கள் மற்றும் நண்பர்கள்.

ஆடிய பாதம் வீதி,
கொக்குவில் மேற்கு.
கொக்குவில்.
[20356]

---

**A/L 92**
**Paper Class**
சனி — ஞாயிறு
7-00 — PURE / APP
திரு. தவரட்ணசிங்கம்
10-00 — BOTANY
திரு. சதீஷ்
11-00 — ZOOLOGY
திரு. செங்காதான்
12-00 — PHYSICS
திரு. விமல்ராஜ்
1-00 — CHEMISTRY
திரு. சிவசோதி
ஆரம்பம்:
05 — 04 — 1992
**BOND INSTITUTE**
யாழ்ப்பாணம்.
[சி-1823]

---

## கட்சித் தலைவர்களுடன் முனசிங்க ஆலோசனை!

### நாளை முதல் ஆரம்பமாகும்

கொழும்பு, ஏப். 5
நாடாளுமன்ற தெரிவுக் குழுவின் தலைவர் திரு. மங்கள முனசிங்க நாளை திங்கட்கிழமை முதல் பிரதான கட்சிகளின் தலைவர்களுடன் ஆலோசனை நடத்த உள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண நியமிக்கப்பட்ட தெரிவுக்குழு முன் கட்சிகள் அமைப்புகள் சார்பில் ஆலோசனைகள் சமர்ப்பிக்கப்பட்டன. சிலர் நேரிலும் தமது கருத்து நிலைப்பாடுகள் குறித்துத் தெரிவித்திருந்தனர்.

ஆனால் தெற்கின் பிரதான கட்சிகளின் ஐ. தே. கவும் ஸ்ரீ. ல. சு. கவும் தெரிவுக் குழுவுக்கு ஆலோசனை எதனையும் சமர்ப்பிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தெரிவுக்குழு தனது அறிக்கையை இம்மாதம் 21 ஆம் திகதி சமர்ப்பிக்கும் என்று ஏற்கனவே செய்தி வெளியாகி இருந்தது.

எனினும் அனேகமாக ஜூன் மாதத்திலேயே தெரிவுக் குழுவின் அறிக்கை பூர்த்தியாகும் சாத்தியம் இருப்பதாக அறிவிக்கப்பட்டது. [ஓ-த]

## தென்மராட்சி கிராம மூலவள செயல்திட்டம்

தென்மராட்சிப் பகுதியிலுள்ள கிராமங்களில் கிடைக்கும் மூலவளங்களைப் பயன்படுத்தி தொழில்களை உருவாக்குவதற்கான செயற் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப் படவுள்ளன.

இதற்கமைவாக, குடிசைக் கைத்தொழில் செய்வோரும், கைத்தொழில்களை ஆரம்பிக்கவுள்ளோரும் பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு தென்மராட்சி பிரதேச செயலாளர் பூ. சுந்தரம்பிள்ளை அறிவித்துள்ளார். (ஒ-117)

---

உ
தெல்லிப்பழை
**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்**
பங்குனிக் கடைசிச் செவ்வாய்

★ **வருடாந்தப் பொங்கல் விழா** ★

**07—04—1992** [செவ்வாய்க்கிழமை]

இவ்வாலயத்தின் பழம்பெரும் விழா
அற்புதமும் எழுச்சியும் கொண்ட வருடாந்தப் பொங்கல்விழா
பொங்கல் செய்து படைத்தும்
நீர்க்கஞ்சி வார்த்து மகிழ்ந்தும்
வீட்டுக்கும் நாட்டுக்கும் தண்ணளி தரும் பெருவிழா

**07—04—1992** செவ்வாய்க்கிழமை காலை 6-00 மணி தொடக்கம் மாலை 6-00 மணி வரை நடைபெறும்.

— நிர்வாகசபை.

துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.
[சி/1756]

---

இந்துசமயப் பேரவை, யாழ்ப்பாணம்
**கைதடி சைவச் சிறுவர் இல்லம்**
**இல்லப் பொறுப்பாளர் / உதவி பொறுப்பாளர்**

## பதவிகள்

கைதடி சைவச் சிறுவர் இல்லத்தில் தங்கியிருந்து அவ்வில்லப் பொறுப்பை ஏற்று நடத்துவதற்கு இந்து சமயத்தைச் சேர்ந்த 45 வயதுக்கு மேற்பட்ட தகுதி வாய்ந்த ஆண், பெண் இருபாலாரி மிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. வேதனம் நேரில் பேசிக் கொள்ளப்படும். ஓய்வு பெற்ற அரச ஊழியர்கள் விரும்பப்படுவர்.

**சமையற்காரர்கள்:**

மேற்படி நிலையத்தில் பணிபுரிவதற்கு அனுபவம் வாய்ந்த 45 வயதுக்கு மேற்பட்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

ஆதரவற்ற சைவச் சிறுவர்களின்

## அனுமதி

மேற்படி இல்லத்தில் சேரவிரும்பும் ஆதரவற்ற, முக்கியமாக வன்செயல் காரணமாக தாய், தந்தையை இழந்த சிறுவர், சிறுமியர் (8 — 12 வயதுக்குட்பட்ட) சார்பில் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. சகல விவரங்களுடன் விண்ணப்பங்கள் பகுதிக் கிராம அலுவலரால் அத்தாட்சிப் படுத்தப்பட்டு பிரதேச உதவி அரசாங்க அதிபரால் உறுதிப்படுத்தப்பட்டு விரைவில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

★ எல்லா விண்ணப்பங்களும் அனுப்ப வேண்டிய முகவரி;

செயலாளர்,
**இந்து சமயப் பேரவை,**
**நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்,**
**நல்லூர், யாழ்ப்பாணம்.**
[சி-1813]

---

மானிப்பாய் மருதடிப்பிள்ளையார் ஆலய முன்றலில்

# ஹற்றன் நஷனல் வங்கி

சிறப்புக் கருமபீடம் 11-04-92 முதல் 14-04 92 வரை

★ சிறுவர் சேமிப்புக்கணக்குகள்
— நூறு ரூபாவுடன் ஆரம்பிக்கலாம்
— 14 % வட்டி

★ சேமிப்புக் கணக்குகள்

★ சேமிப்புக் கூப்பன்கள்
— வருமானவரி இல்லை
— கடன் பெறும் வசதிகள்
— எந்தக் கிளையிலும் காசாக்கலாம்

★ நிலையான வைப்புகள்

**ஹற்றன் நஷனல் வங்கி**
**லிமிட்டெட்,**
(உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி)
54, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
[சி-1828]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## மலிவு விற்பனை

1992 ஆம் ஆண்டுக்கான திருக்கணித பஞ்சாங்க மாதக் கலண்டர், டயரிகள் மலிவு விலையில் எல்லாப் புத்தக சாலைகளிலும் விற்பனையாகின்றன. அன்பளிப்புச் செய்யும் நிறுவனங்களுக்கு விசேட கழிவுண்டு. திருக்கணிதம்- சாவகச்சேரி.
[சி-1755]

## தேவை

A/L விஞ்ஞானம் படித்த Typing (ஆங்கிலம் / தமிழ்) தெரிந்த உதவியாளர்கள் தேவை. நற்சான்றிதழ்களுடன் நேரில் வரவும். பரீட்சைப் பகுதி, Bond Institutes, 58 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
[சி-1821]

ஒடியல் தேவை. தொடர்பு கொள்ளவும் 'அண்ணா]பாம்' இணுவில். [சி-1829)

## MATRIMONIAL

Variety of Horoscopes Brides & Bride Grooms available with full particulars. Detail arrangements guaranteed- Call-over before 2-p.m on all days 16/16, Valanpuram, Colombuthurai, K. Thiruvilangam.
(20337)

## காணவில்லை

சிவப்பு நிறமும் - நெற்றியில் வெள்ளை நிற சுட்டியும்- மேல் நோக்கி வளைந்த கொம்புடைய கறவைப் பசு 27-3-92 வெள்ளிக்கிழமையில் இருந்து காணவில்லை. இப்பசுவைக் கண்டவர்கள் தயவு செய்து திருக்குடும்ப கன்னியா மடம், பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். ச. பெ. வரதராசன் உரிமையாளர். [20352]

## A/L வினாத்தாள்கள்

A/L 91 பரீட்சைக்குத் தயாராகும் விஞ்ஞான மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம். Bond Institutes, 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [சி-1827]

## புலமைப் பரிசில் பரீட்சை

ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான விசேட வினாத்தாள்கள் மலிவாகப் பெற்றுக் கொள்ளலாம். விடையளித்துத் தந்தால் இலவசமாகத் திருத்திக் கொடுக்கப்படும். Bond Institutes, 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [சி-1825]

## கல்வி

G.C.E (O/L) இல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் இதுவரை சித்தியடையாதவர்களுக்கும், ஆரம்ப அறிவின்றிக் குறைந்த புள்ளிகளைப் பெற்றவர்களுக்கும், 25 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலத்தில் விசேட சித்திக்குக் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, சுண்டிக்குளி.
[20355]

## அம்பாள் திருமண சேவை

கனடா, சுவிஸ், ஜேர்மனி, பிரான்ஸ், நோர்வே ஆகிய நாடுகளில் வேலை பார்க்கும் மணமக்களுக்கு மணப்பெண்கள் தேவை. விண்ணப்பம் ரூபா 50/-. சின்னச்சாமிக் குருக்கள் சண்முக ஐயர், வீரமாகாளி அம்மன் கோவில், நல்லூர், யாழ்ப்பாணம்.
[20342]

---

பாடசாலை மாணவர்களின் சீருடைகள்,
அலுவலகங்களில் வேலை செய்வோர்களின் ஆடைகள்,
துரிதமாகவும் தூய வெண்மையாகவும் சலவை செய்வது

## ★ மில்க்வைற் சலவைத் தூள் ★




ஓர் உள்ளூர் உற்பத்தி
இதன் சக்தி மிக்க நுரைவளம் அழுக்கை வெளியேற்றுவதில் திறமையாகச் செயற்படுகிறது.

★ 50 கிறாம் பக்கற் ரூபா 5/-
★ ஒரு டசின் விலை ரூபா 54/-

● வெற்றுப் பக்கற்றுகளைச் சேகரித்து எம்மிடம் சேர்ப்பித்து அன்பளிப்புகளைப் பெறுங்கள்.

- மில்க்வைற், யாழ்ப்பாணம்.

[சி-1768]

---

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணகம்: 17 — 03 — 1917



விண்ணகம்: 05 — 04 — 1988

### அமரர் சித்தம்மா முத்தையா

எங்கள் குடும்ப ஒளிவிளக்காய் நின்று, எம்மை வாழ்வித்த அன்புத் தெய்வமே! ஆண்டு நான்கு கழிந்ததம்மா! ஆயிரம் ஆண்டுகள் கழிந்தாலும் ஆறிடுமோ எம் துயர், உங்கள் ஆத்மா சாந்தியடைய மாதாவை பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்;
அன்புக் கணவர் (முத்தையா),
மகன்- டோமினிக்சர்வே,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,

62/1, டேவிற் றோட்.
யாழ்ப்பாணம்.
[20258]

---

## முதலாம் ஆண்டு ஞாபகார்த்தம்

பூவுலகில்: 10 — 12 — 1940



வானுலகில்: 19 — 03 — 1991

அமரர்

### பொன்னுத்துரை சோமசேகரம்

(முன்னாள் தபால் தரம்பிரிப்பாளர்)

திதி: பங்குனி சதுர்த்தி 06 - 04 - 1992

ஆண்டுபிர மோதூத அதில்வளர் பங்குனியில்
ஈண்டுநற் றிதியாம் சதுர்த்திமிசை - மாண்புமிகு
தூண்டு சுடரணைய சோமசேகர நல்லான்
ஆண்டவனினடி சேர்ந்த நாள்.

உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
- குடும்பத்தினர்.

113 (295), கச்சேரி நல்லூர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
[20353]

---

## SALE OF ENGLISH BOOKS

**AT ERIC GANESH (OPTICIANS)**
**566, Hospital Road, Jaffna.**

**From 06-04-1992 to 11-04-1992**

English books off the Shelves of a Late Industrial Consultant ideally suited for those interested/involved in Industrial development, Rural / Cottage Industry, Re-habilitation, Import / Export, Project Formulation / evaluation, Fisheries and alternate Energy sources.

(Note: Books will be sold in lots Categorised Industry / subject wise. There will be no sale of individual books)

[4615]

---

## 90 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு: 18 — 11 — 1966



உதிர்வு: 07 — 01 — 1992

அமரர்

### கந்தலிங்கம் சதீஸ்குமார்

(யாழ். மருத்துவ பீட நாலாம் ஆண்டு மாணவன்)

எங்கள் அன்புச் செல்வமே சதீஸ்!
நீ மறைந்து 90 நாட்கள் ஓடிவிட்டன - ஆனால்
உன் மலர்ந்த முகமும், மகிழ வைக்கும் -
சொல்லழகும்
எம் நெஞ்சை விட்டு அகலவில்லை!
காலன் உன்னை இவ்வளவு விரைவில் அழைப்பான்
என்று கனவிலும் நாம் கருதவில்லை!
செல்வமே! எம் உயிர் இருக்கும் வரைக்கும்
உன் நினைவிருக்கும்.

உன் பிரிவால் வாடி வதங்கும்:
அன்பின் அப்பா, அம்மா, அக்கா,
அத்தான், அண்ணாமார் அண்ணி,
மாமாமார் குடும்பம், சித்திமார் குடும்பம்.

23, யாழ் வீதி,
யாழ்ப்பாணம்.
[20306]

---

## 1 ஆம் வருட நினைவஞ்சலி

அன்னையின் மடியில்: 04—08—1966



ஆண்டவன் பிடியில்: 17—03—1991

### அமரர் சிவபுரநாதர் சிவராசா

(சிவன்)

[இலங்கை மின்சாரசபை, சுன்னாகம் - பாதுகாப்பு ஊழியர்]

திதி: 5-4-1992 (ஞாயிற்றுக்கிழமை)

பாசமுடன் வளர்த்தெடுத்த என் அன்புச் செல்வமே!
பார்த்த ஓர் நிமிடம் கண்மூடிக் கதை முடித்தாய்
பார்த்தும் பாராமல் கனவோடு உறவு கொண்டாய்
ஓராண்டு முடிந்தாலும் உன் நினைவு மறையாதடா!

[இலங்கை மின்சார சபை ஊழியர்களுக்கு நன்றி]

ஓம் சாந்தி!

உன் பிரிவால் துயருறும்;
அப்பா, அம்மா, அக்கா, மருமகன்.

சங்கரத்தை,
வட்டுக்கோட்டை.
[20328]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

## கவனம் வேண்டும்

ஈழத் தமிழ் மக்களின் உயிருக்கு உயிரான சொத்துக் கல்வி. வாழையடி வாழையாக, பரம்பரை பரம்பரையாக தமிழ் மண்ணில் வளம் பெற்று ஓங்கி வளர்ந்த பெரும் விருட்சம் அதுவே. அந்த விருட்சத்தின் நிழலே தமிழர்களுக்குப் பலத்தையும் மன உறுதியையும் பொழிகின்றது

அந்தக் கல்வி விருட்சத்தை வெட்டி எறிவதற்கு — கல்விக் கொலை நடத்துவதற்கு — ஸ்ரீலங்கா அரசு திட்டமிட்டுச் செயற்படுகிறது என்பது தெரிந்த விடயம்.

அரசாங்கத்தின் இந்தச் சதித் திட்டம் குறித்து அவ்வப்போது இப்பத்தியில் எடுத்தியம்பி வந்துள்ளோம். இப்போதுள்ள போர்க்காலச் சூழ்நிலையை தக்கவாறு பயன்படுத்தி, முன்னர் எப்போதும் இல்லாத அளவுக்கு, அரசு தமிழர்களின் கல்வி வசதிகளையும் வாய்ப்புகளையும் பறித்து வருகிறது. உண்மையில் மக்களின் மிக அடிப்படை மனித உரிமைகளில் ஒன்றான கல்வி உரிமை நசுக்கப்படுகிறது.

இராணுவ நடவடிக்கைகளால் உண்டாகும் அனர்த்தங்கள், இழப்புகள் என்பனவும், பொருளாதாரத் தடைகளால் உண்டாகும் துன்பங்கள், கஷ்டங்களும் எமக்கு நேரில் தெரிகின்றன. ஆகையால் அவற்றை கெகு இலகுவில் இனங்காணுகிறோம். அவற்றை எதிர்கொள்வதற்கான மாற்று நடவடிக்கைகளை ஆராய்கிறோம்; கைக் கொள்கிறோம்.

தமிழர்களின்கல்வியைஉருக்குலைக்கும் உலுத்தத்தனத்தில் அரசு மிக சாதுரியமாகவும், மறைமுகமாகவும் செயற்பட்டு வருகிறது. அதனால் எம்மில் பலருக்கு கல்வி உரிமைகள் பறிக்கப்படுவது புலப்படுவதில்லை. அதனால் அது குறித்து ஆழமாகவும், தீவிரமாகவும் ஆராய்ந்து மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான பணிகள் இன்னும் சரியாகத் தொடங்கப்படவில்லை.

இந்நிலையில் தமிழீழத் தேசிய ஆசிரியர் ஒன்றியம் தமிழீழ மண்ணில் கல்விக் கொலை எவ்வாறு புலப்படாத முறையில் (Invisible) நடந்து வருகிறது என்பதை மிகத் தெளிவாக விளக்கும் பிரசுரம் ஒன்றை வெளியிட்டிருக்கிறது.

தமது பிள்ளைகளின் கல்வி வளர்ச்சி மழுங்கடிக்கப்படுகிறது என்ற உணர்வை ஒவ்வொரு தமிழ் மகன் மனதிலும் கிளர்ந்தெழச் செய்யும் விதத்தில் அந்தப் பிரசுரம் அமைந்திருக்கிறது.

தமிழர்களைப் பலவீனமடையச் செய்வதற்கு அவர்களின் கல்வி வளத்தைச் சிதைத்து நாசமாக்கிவிட வேண்டும் என்பதே அரசாங்கத்தின் நோக்கம்.

எனவே இராணுவ ஆக்கிரமிப்பை எவ்வாறு எதிர் கொள்கிறோமோ, பொருளாதாரத் தடை மற்றும் அழுத்தங்கள் மூலம் விளைவிக்கப்படும் இன்னல்களுக்கு எதிராக எவ்வாறு எழுந்து நிற்கிறோமோ, அதே போல, கல்வியைக் கொலை செய்ய எடுக்கப்படும் முயற்சிகளையும் முறியடித்து முன்னோக்கிச் செல்ல முனைய வேண்டும்.

கல்வி மீதுள்ள ஆர்வமும் அக்கறையும் விடுகள்தோறும் மேலும் வளர்க்கப்பட வேண்டும். கல்வியைப் பேணி எமது இளம் சந்ததியினருக்கு ஊட்டுவதற்கான ஆக்க வழிகளை, மாற்றுமுறைகளை கல்விமான்களும், ஆசிரியர்களும் கண்டறிய வேண்டும். அரசின் நோக்கம் தோல்வி அடையும் விதத்தில் பெற்றோர்கள், ஆசிரியர்கள், கல்விமான்கள் ஆகிய முத்தரப்பாரும் கூட்டாக உழைக்க வேண்டும் அது வேவெற்றிக்கு வழிகாட்டும்.

# அகோர வெப்பத்துக்கு காரணர் இயற்கையும், மனிதர்களுமே!

பிரிட்டிஷ்காரர்கள் நண்பர்களைச் சந்திக்கும் போது காலநிலை பற்றித் தான் பேச்சைத் தொடங்குவார்களாம்.

''கோடைகாலம் ஆரம்பமாகிவிட்டது போலிருக்கு ஏனென்றால் மழை சூடாக இருக்கிறது'' — இது லண்டன் நகைச்சுவை.

இங்கே—

''உஷ்ஷ்! அப்பப்பா என்ன வெய்யில் இது உடம்பெல்லாம் எரிகிறது.''

''கந்தோரிலை கறன்டும் இல்லை. காற்றாடியும் கறள் பிடிச்சுக் கிடக்கு. எப்படா வீட்டுக்குப் போய் சட்டையைக் கழற்றிப் போடுவம் எண்டு கிடக்கு''

இவை இப்போது நாம் அன்றாடம் கேட்கும்

## மனிதனின் துரோகத்துக்கு இயற்கை விடும் எச்சரிக்கையாகவும் கருதலாம்

''சலிப்புகள்''

''பத்திரிகையைப் பார்த்தால் பயமாக இருக்கு'' என்றார் ஒருவர். ''சூரியன் நாளைக்கு எங்கடை நாட்டுக்கு மேலாலை வரப் போகுதாம். இப்பவே சூடு தாங்க முடியாமல் கிடக்கு. தலைக்கு மேலே வந்தா தாங்க முடியுமா?'' அவர் அலுத்துக் கொள்கிறாரா? இன்று ஏப்ரல் 5 ஆம் திகதி தொடக்கம் 15 திகதி வரை சூரியன் இலங்கைக்கு நேர் உச்சத்தில் சஞ்சரிப்பான் என்று காலநிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது கடந்த மார்ச் 21 ஆம் திகதி சூரியன் பூமியின் நடுக்கோட்டுக்கு நேராக வந்து வட அரைக்

### காலநிலை

கோளப் பக்கம் நகர்ந்து கொண்டிருப்பதால் இக்கால கட்டத்தில் எமது நாட்டில் வெப்பம் அதிகரிப்பது வருடா வருடம் நடக்கும் நிகழ்வாகும்

ஆனால் இவ் வருடம் வழமையை விடக் கூடுதலான வெப்பம் அவதானிக்கப்படுகிறது

சூரியன் நேர் உச்சத்துக்கு வருவதால் வெப்பம் அதிகரிப்பதோடு சூரியனின் மேற்பரப்பில் ஏற்படும் சில விளைவுகளும் வெப்ப அதிகரிப்புக்கு காரணமாகும்.

சூரியனின் மேற்பரப்பில் காலத்துக்குக் காலம் கரும்புள்ளிகள் [SUN SPOTS] தோன்றுகின்றன. இவை படிப்படியாக எண்ணிக்கையில் கூடி, உச்ச நிலை அடைந்து, பின்னர் மீண்டும் படிப்படியாக குறைந்து விடுகின்றன. இவ்வாறு கூடிக்குறையும் ஒரு சுற்று நிகழ சுமார் 11 வருடங்கள் செல்வதாக ஸ்வாப் என்ற ஜேர்மனியர் 19ஆம் நூற்றாண்டில் கண்டறிந்தார்.

கரும்புள்ளிகள் தோன்றுவதற்கான சரியான காரணம் இன்னும் கண்டறியப்படவில்லை.

தற்போது 22ஆவது சுற்றில் இறங்கு முக நிலைக் காலமாகும். இந்த சுற்றில் உச்சநிலைக் காலம் 1989-90 இல் ஏற்பட்டது. அப்போது சுமார் 180 புள்ளிகள் வரையில் அவதானிக்கப்பட்டன. இந்த ஆண்டு மார்ச் மாதத்தில் புள்ளிகளின் எண்ணிக்கை 120—130 வரையில் இருந்தது. 1995 ஆம் ஆண்டளவில் இவ்வெண்ணிக்கை 10இற்குக் கீழே குறையக் கூடும். அதன் பின் 23ஆவது சுற்று ஆரம்பமாகும்.

### தீச்சுவாலைகள்

சூரியக் கரும் புள்ளிகளிலிருந்து அடிக்கடி பெரும் தீச்சுவாலைகள் (So'ar Flares) சீறிப் பாய்கின்றன சில சமயங்களில் இவை பல கோடி மைல் தூரம் நீண்டு செல்வது உண்டு.

சுவாலைகளின் நீளம், அவற்றின் ஒளிர்வு, வெப்பம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு அவை 3ரகங்களாக பகுக்கப்பட்டுள்ளன.

மிக நீண்டவையும் ஒளிர்வுடையவுமான சுவாலைகள் 'எக்ஸ்' (X) ரக சுவாலைகள் 'எம்' (M) ரக சுவாலைகள் 'எக்ஸ்' சுவாலைகளை விடச் சற்றுக் குறைவானவை. எனினும் இவையும் சக்தி மிக்க சுவாலைகள் தான். மூன்றாவது 'சி' [C] ரக சுவாலைகள் சிறியவை. இவை பூமியில் உணரப்படுவதில்லை.

சூரியச் சுவாலைகளும் சூரியனைப் போன்றே ''எக்ஸ்'' கதிர்களையும் புறஊதாக் கதிர்களையும் பரப்புகின்றன. இவற்றுள் வெப்பம் பரப்பும் 'எக்ஸ்' கதிர்கள் முதலில் பூமியை வந்தடைகின்றன. அயன் வலயத்தையும் பூமியின் காந்தப் புலத்தையும் பாதிக்கும் புறஊதாக் கதிர்கள் அதன் பின் வருகின்றன.

சுவாலை வெளிப்பட்ட 2, 3 தினங்களில் வெய்யிலின் அகோரம் அதிகரிக்கும். பின்னர் வானொலி சிற்றலை ஒலிபரப்புகள் பாதிப்படையும். ஒலிபரப்புகளில் கடுமையான ஒலித் தாழ்வு ஏற்படும். சில சமயங்களில் [Total Fade out எனப்படும்] ஒலிபரப்பு முற்றாகத் தடைப்படுதலும் நிகழும்.

சூரியச் சுவாலைகள் பூமி இருக்கும் பக்கமாக நீளும் சமயங்களில் மேலே கூறிய தாக்கங்கள் கூடுதலான அளவில் இருக்கும்.

இவ்வருடம் மார்ச் மாதத்தில் 5 ''எக்ஸ்'' ரக சுவாலைகள் வெளியேறின. மார்ச் 25 ஆம் திகதி 5 'எம்' ரக சுவாலைகளும் 29 ஆம் திகதி 3 'எம்' சுவாலைகளும் அவதானிக்கப்பட்டதாக விட்னியிலுள்ள [I.P.S.] அவதான நிலையம் அறிவித்தது.

### பிரதான காரணம்

சூரியச் சுவாலைகள் அநாதி காலம் தொட்டு ஏற்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றன.

- காந்தசாரணன் -

ஆனால் இந்த வருடம் சூரியத் தாக்குதல் அதிகரித்தமைக்கு எமது சூழல் கெட்டிருப்பதே பிரதான காரணமாகும்.

சூரியக் கதிர்கள் பூமியை வந்தடையும் போது பூமிக்கு மேலே காக்கும் கவசமாக விளங்கும் பவன வலையம் கதிர்களிலுள்ள கேடு விளைவிக்கும் தன்மைகளை வடிகட்டி விடுகிறது.

பவன வலையம் பல்வேறு வாயுப் படலங்களைக் கொண்டது இவற்றுள் 'ஓஸோன்' படலம் மிகவும் முக்கிய வடியாகும்.

இயற்கை நியதியை மீறும் மனிதச் செயற்பாடுகள் அதிகரித்து வருவதால் இந்த 'ஓஸோன்' படலம் நலிந்து மெலிந்து விட்டது. சில பகுதிகளில் துவாரங்களும் ஏற்பட்டுள்ளன. இத்துவாரங்களினூடாக அதிக வெப்பம் பூமியை வந்தடைகிறது. தற்போதைய வெப்ப அதிகரிப்புக்கு இதுவும் ஒரு காரணமாகும்.

### கரியமிலவாயு அதிகரிப்பு

வெப்பம் அதிகரித்ததற்கு மற்றுமொரு காரணம் பூமியின் வளிமண்டலத்தில் கரியமில வாயுவின் விகித அதிகரிப்பாகும்.

காடுகள் அழிக்கப்பட்டுப் பெருமளவு மரங்கள் வெட்டப்படுவதாலும், தீ மூட்டி எரிக்கப்படுவதாலும், தொழிற்சாலைகளின் கழிவுப் பொருள்கள் அதிகரித்துள்ளதாலும் வளியில் கரியமில வாயுவின் விகிதம் அதிகரித்துள்ளது.

இலங்கையில் இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் 70 வீத நிலப்பரப்பில் காடுகள் இருந்தன. தற்போது இது 23 வீதமாகக் குறைந்துள்ளது.

மரங்கள் குளுமையான உயிர்வாயுவை வெளிவிடுகின்றன. அத்துடன் நிழல் பரப்பி, நிலத்தின் ஈரலிப்புத் தன்மையைப் பாதுகாக்கின்றன. எனவே மரங்கள் கூடுதலாக வெட்டப்படுவதால் வெப்ப அதிகரிப்பு கணிசமான அளவு கூடுகிறது.

இவற்றை நோக்கும் போது வெப்ப அதிகரிப்புக்கு மனிதரின் முறைகெட்ட நடவடிக்கைகளே காரணம் என்பது புலப்படும்.

சூழலை மனிதன் சிதைப்பதால் கோபமுற்ற இயற்கை அன்னை நமக்கு அனுப்பும் எச்சரிக்கையாக இந்த வெப்ப அதிகரிப்பைக் கருதலாம்.

★

# தமிழக இளைஞர்களுக்கும் ஆயுத பயிற்சி நடக்கிறதாம்

## தடுத்து நிறுத்தப்படும் என்கிறார் தேவாரம்

சென்னை, ஏப். 5

தமிழ்நாட்டில் தமிழ் மறுமலர்ச்சி இயக்கம் என்ற பெயரில் தமிழக இளைஞர்களுக்கு ஆயுதங்களைக் கையாளவும், நாசகார நடவடிக்கைகளில் ஈடுபடவும் பயிற்சி அளிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக பொலிஸாருக்குத் தகவல்கள் கிடைத்துள்ளதாக தமிழ்நாடு பொலீஸ்மா அதிபர் டபிள்யூ. ஐ. தேவாரம் செய்தியாளர் மாநாடு ஒன்றில் தெரிவித்தார்.

இத்தகைய தேச விரோத நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்த உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் அவர் சொன்னார்.

இத்தகைய பயிற்சிகள் இலங்கையிலா அல்லது இந்தியாவிலா அளிக்கப்படுகின்றன என்பது பற்றி தமக்கு நிச்சயமாகத் தெரியவில்லை என்றும் அவர் கேள்வி ஒன்றுக்குப் பதில் அளிக்கையில் தெரிவித்தார். [ஒ-த]

## ஆராதனை விழா

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் 11 ஆவது ஆண்டு ஆராதனை விழா எதிர் வரும் 9 ஆம் திகதி வியாழக் கிழமைக் கிழமை நல்லை ஆதீனத்தில் நடைபெறும்.

அன்று காலை 8 மணிக்கு விசேட ஹோமம், யாக பூஜைகளுடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும் நண்பகல் 12 மணிக்கு அன்னதானமும் அதனைத் தொடர்ந்து பெரிய புராண படலம் ஓதல் இடம்பெறும் பிற்பகல் 3 மணி முதல் இசையரங்கும் அதனைத் தொடர்ந்து, பத்த நந்தனார் இசை நாடகமும் இடம் பெறும்.

# அனைத்துக் கடைகளுக்கும் விடுமுறை தினங்கள் பொருந்தும்

## வர்த்தக சங்க சமாசம் அறிவிப்பு

நகர்ப்புறம், பிரதான இடங்கள் தவிர்ந்த ஏனைய உட்புறமான கடைகளும் வர்த்தக விடுமுறை தினங்களை கடைப்பிடிக்க வேண்டும் —

இவ்வாறு வட பிராந்திய வர்த்தகர் சங்கங்களின் சமாசம் அறிவித்துள்ளது.

வர்த்தக விடுமுறை நாட்களான சனி அரை நாள், ஞாயிற்றுக்கிழமை மற்றும் அனுமதிக்கப்படும் விடுமுறை தினங்களிலும் பொதுச் சந்தைகளின் மரக்கறி, பழக் கடைகள் தவிர்ந்த ஏனைய சகல உட்கடை வியாபாரிகளுக்கும் பொருத்தமானவை எனவும் —

அதனை நடைமுறைப்படுத்தலும், மீறுவோர் மீது நடவடிக்கை எடுக்கும் உரிமையும் சம்பந்தப்பட்ட வர்த்தக சங்கங்களுக்கு உண்டு எனவும்— கடந்த சனியன்று இடம்பெற்ற சமாச நிர்வாகக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. [ஓ]

# வாழைத் தோட்டக்காரரில் ஒரு சிலரே ஸ்ரீகோதாவுக்கு!

## இப்படிக் காமினி கூறுகிறார்

கொழும்பு, ஏப் 5

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைக் காரியாலயமான ஸ்ரீகோதாவிற்கு இன்று வாழைத் தோட்டத்தைச் சேர்ந்த ஆறு, ஏழு பேர்கள் தான் சென்று வருகின்றனர்.

முன்னாள் அமைச்சர் காமினி திஸநாயக்கா மத்துகமவில் நடைபெற்ற ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணிக் கட்சிக் கூட்டம் ஒன்றில் பேசுகையில் முன் கண்டவாறு தெரிவித்தார்.

இந்த நாட்டில் ஜனநாயக வளர்ச்சி தேக்க நிலையை அடைந்து விட்டதாகவும் அவர் கூறினார்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் பேச்சுக்கு இன்று மதிப்பில்லாமல் போய் விட்டது என்றும் திரு. திஸநாயக்கா கூறினார். (இ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 300 போர்க்கப்பல்கள் குறித்து ரஷ்யா-உக்ரைன் கருத்து மோதல்

மாஸ்கோ, ஏப். 5

கருங்கடலில் உள்ள முன்னாள் சோவியத் யூனியனுக்குச் சொந்தமான 300 போர்க் கப்பல்கள் கொண்ட கடற்படை அணியைப் பகிர்ந்து கொள்வது குறித்து ரஷ்யாவுக்கும் உக்ரைனுக்கும் இடையே தீவிரக் கருத்து மோதல் ஏற்பட்டுள்ளது.

உக்ரையின் நாட்டில் கருங்கடல் பிரதேசம் உள்ளது.

கருங்கடலில் நிலைகொண்டுள்ள போர்க்கப்பல்களைத் தனது கட்டுப்பாட்டில் கொண்டுவர உக்ரைன் எவ்வித முயற்சியும் மேற்கொள்ளக் கூடாது என்று ரஷ்ய ஜனாதிபதி யெல்ட்சின் எச்சரித்திருக்கின்றார்.

கருங்கடல் கடற்படை தனது நாட்டுக்கே சொந்தமானது என்று உக்ரைன் ஜனாதிபதி தெரிவித்ததற்குப் பதிலளிக்குமுகமாக திரு. யெல்ட்சின் இந்த எச்சரிக்கையை விடுத்திருக்கிறார். (எ-த)

## மரண அறிவித்தல்கள்

### இளையதம்பி நாகலிங்கம்

கொக்குவில் மேற்கைச் சேர்ந்த இளையதம்பி நாகலிங்கம் 4-4-92 நேற்று சிவபதமடைந்துவிட்டார். அன்னார் காலஞ்சென்ற கமலாட்சியின் அன்புக் கணவரும், யோகேஸ்வரி, நவரட்ணம், வன்னியசிங்கம் [ஆசிரியர், யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி], பாலகுமாரன், பத்மாவதி, விமலாதேவி, காலஞ்சென்ற கனகரட்ணம், யோகராணி, சாரதசேகரம் [பிரான்ஸ்], விஜயகுமாரி, ஞானசேகரம் [ஜேர்மனி], சந்திரசேகரம் [பிரான்ஸ்] ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற கனகரட்ணம், விஜயசிங்கம் நவரட்ணராஜா [சவுதி], லோகேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனாரும், ரஜீவன், சுதர்சினி, சுபாசினி, லாவன்ஜா, சிந்துஜன், மாதுரிஜா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் 5-4-92 ஞாயிற்றுக்கிழமை [இன்று] காலை 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பயன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகின்றோம்.

தகவல்:
நா. வன்னியசிங்கம் [மகன்]

கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.
[20360]

### நன்னித்தம்பி சிவராசா (குஞ்சர்)

மயிலிட்டியைச் சேர்ந்த நன்னித்தம்பி சிவராசா கொழும்பில் காலமானார். அன்னார் வசாவிளான் முன்னாள் விதானையார் சங்கரப்பிள்ளையின் பேரனும், நன்னித்தம்பி - கமலாம்பிகை தம்பதிகளின் மகனும், காலஞ்சென்ற செல்வி செல்வநாயகி சங்கரப்பிள்ளையின் [ஆசிரியை] பெறாமகனும், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் மற்றும் திருமதி செல்லம்மா பாலசுப்பிரமணியம் ஆகியோரின் மருமகனும், திரு. செல்வராசா, தருமராசா [சவூதி அரேபியா], திருமதி செல்வராணி இராமநாதன், ஜெயராணி சிவசுந்தரம், தவமலர், பாலச்சந்திரன் ஆகியோரின் சகோதரரும், திரு. பொ. இராமநாதன் [இளைப்பாறிய நில அளவையாளர்], திரு. தி. சிவசுந்தரம் [தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம்], திரு. பா. பாலச்சந்திரன் [புன்னாலைக்கட்டுவன்], திரு. பா. ரஞ்சிதசெல்வம் [டென்மார்க்], திருமதி மரகதவல்லி செல்வராசா ஆகியோரின் மைத்துனரும், இ. பிரபாகரன், இ. ஐங்கரன், இ. கிருஷ்ணகுமார், இ. சுசீலா, சி. பாரதி, பா. சுஜந்தினி ஆகியோரின் மாமனாரும், செ. தர்சன், செ. அனுஷா ஆகியோரின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் 4-4-92 சனிக்கிழமை கொழும்பில நடைபெற்றன. இதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகிறோம்.

தகவல் :
பா பாலச்சந்திரன் [மைத்துனர்]

பன்னாலை.
(4614)

### மாணிக்கம் கணபதிப்பிள்ளை

மாணிக்கம் கணபதிப்பிள்ளை காலமானார். அன்னார் சித்தங்கேணியை வசிப்பிடமாகக் கொண்டவரும், சிவசம்பு மாணிக்கம் தம்பதிகளின் மூத்த புதல்வரும், சரோஜாவின் அன்புக் கணவரும், தவசீலன், உதயசீலன், பத்மசீலன், மோகனா [ஜேர்மனி], சுமதி, ஜெயசீலன் ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி குமாரசாமி, திருமதி முத்துத்தம்பி, திருமதி திருச்செல்வம், காலஞ்சென்ற நவரத்தினசிங்கம், துரைராசா, செல்வராசா [நாரந்தனை பிரதேசசபை] ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற குமாரசாமி [ஆசிரியர்], முத்துத்தம்பி [சுதுமலை], திருச்செல்வம், திருமதி ந. ஜெயசோதி, திருமதி து. இராஜேஸ்வரி, திருமதி செ. யசோதலயம் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [5-4-92] ஞாயிறு காலை 10 மணிக்கு வழுக்கையாறு மயானத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இத்தகவலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. திருச்செல்வம் [மைத்துனர்]

சித்தங்கேணி
[20357]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 5 - 4 - 1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

நவகம சில்வைப்பு:

# அச்சக உரிமையாளருக்கு நஷ்ட ஈடுவழங்க உத்தரவு

கொழும்பு, ஏப். 5

'யுக்திய' பத்திரிகை வெளியிடும் நவகம வெளியீட்டாளர்களுக்கு பொலீஸார் நஷ்ட ஈடு வழங்க வேண்டும் என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

தமது அச்சகம் சேதமாக்கப்பட்டதற்கு நஷ்ட ஈடுகோரியும்—

தமது அச்சகம் 'சீல்' வைக்கப்பட்டது மூலம் தமது அடிப்படை மனித உரிமைமீறப்பட்டுள்ளது என்று கோரியும் அச்சக உரிமையாளரால் இந்த வழக்கு உயர் நீதிமன்றந்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. மூன்று நீதியரசர்கள் முன்னிலையில் இந்த வழக்கு விசாரணை செய்யப்பட்டது.

கடந்த ஆண்டு இந்த அச்சகம் பொலீஸாரினால் மூடி 'சீல்' வைக்கப்பட்டது.

'சீல்' வைக்கப்பட்டிருந்த சமயம் உள்ளே இருந்த அச்சு இயந்திரங்கள், மற்றும் சாதனங்கள் பொலீஸாரினால் உடைத்து நாசமாக்கப்பட்டன என்று அச்சக உரிமையாளர் தமது முறைப்பாட்டில் தெரிவித்திருந்தார்.

அரசமைப்பில் கூறப்பட்ட மனித உரிமைச் சட்டத்தை மீறியதுக்காக அச்சக உரிமையாளருக்கு 25 ஆயிரம் ரூபா நஷ்ட ஈடு வழங்குமாறு நீதியரசர்கள் தமது தீர்ப்பில் பொலீஸாருக்கு உத்தரவிட்டனர்.

அச்சகம் சேதமாக்கப்பட்டதற்கு நஷ்ட ஈடு கோரி மற்றொரு வழக்கைத் தாக்கல் செய்யுமாறு நீதியரசர்கள் தமது தீர்ப்பில் அச்சக உரிமையாளருக்கு ஆலோசனை வழங்கினர்.

அச்சகம் 'சீல்' வைக்கப்படுவதற்கு முன்னதாகவே அங்கிருந்து அச்சக சாதனங்கள் அகற்றப்பட்டிருந்தன என்று பொலீஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்ட வாதத்தை நீதியரசர்கள் ஏற்க மறுத்து பொலீஸாரை குற்றவாளிகளாகத் தீர்த்துள்ளனர். (இ-எ)

## கைலாசபிள்ளையார் கோவில் முன்றலில்

அன்னை பூபதி நினைவாக அடையாள உண்ணா விரதம் நேற்று நல்லூர் கைலாசபிள்ளையார் கோவில் முன்றலில் அனுஷ்டிக்கப்பட்டது.

நேற்றுக் காலை முதல் பிற்பகல் வரை நடந்த இந்த உண்ணா நோன்பில் யாழ்ப்பாணம் ப. நோ. கூ. சங்க ஊழியர்களும் மற்றும் பொது மக்களும் பெரும் எண்ணிக்கையில் கலந்து கொண்டனர். [இ-5]

# 'உதயன்' கிண்ணம் திருமலை அணிக்கு!

## நேற்று விறுவிறுப்பான ஆட்டம்

பருத்தித்துறை, ஏப். 5

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்திய 7 பேர் கொண்ட அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டியில் திருகோணமலை நட்சத்திர விளையாட்டுக்கழக அணி சாம்பியனாகி, உதயன் வெற்றிக் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

நேற்று மிகவிறுவிறுப்பாக —பெரும் திரளான ரசிகர்கள் மத்தியில்— நடைபெற்ற இறுதியாட்டத்தில் திருமலை நட்சத்திர விளையாட்டுக் கழக அணி, வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழக அணியை 2-0 என்ற கோல் கணக்கில் தோற்கடித்தது.

நேற்று மாலை பருத்தித்துறை திக்கமுனையில் உள்ள பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழக மைதானத்தில் இந்த இறுதியாட்டம் நடைபெற்றது.

அதற்கு முன்னர் நடைபெற்ற கண்காட்சி உதைபந்தாட்டத்தில் ஷப்றா அணியை எதிர்த்து வதிரி டயமண்ட்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது. இரு அணிகளும் தலா ஒவ்வொரு கோல் அடித்ததில் ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

'உதயன்' கிண்ண சுற்றுப் போட்டியின் 3 ஆம் இடத்தைப் பெறும் அணியைத் தெரிவு செய்வதற்கான ஆட்டம் அடுத்து நடைபெற்றது.

இந்த ஆட்டத்தில் கலட்டி ஐக்கிய விளையாட்டுக் கழக அணி, வல்வை புளூஸ் அணியை 2 - 1 என்ற கோல் கணக்கில் தோற்கடித்தது.

இறுதியாட்டத்தில் வதிரி பொம்மர்ஸ் அணி தோல்வியுற்ற போதிலும் வதிரி அணியின் ஆட்டம் சிறப்பாக அமைந்திருந்தது.

இறுதியாட்டத்துக்கு திரு. த. அருணகிரிராஜா மத்தியஸ்தம் வகித்தார். உதவி மத்தியஸ்தர்களாக திரு. மா. கிருஷ்ணாகாந்தன், திரு. வரதராஜா ஆகியோர் கடமையாற்றினர்.

இறுதியாட்டத்தின் போது முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட— தமிழீழ விடுதலைப் புலிகளின் தமிழீழ கடற்பிராந்திய இணைப்பாளர் திரு. சூசை — வெற்றி பெற்ற அணிகளுக்குப் பரிசில்கள் வழங்கினார். பரிசளிப்பு வைபவம் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத் தலைவர் திரு. இ. இராசநாதன் தலைமையில் நடந்தது.

இந்தச் சுற்றுப் போட்டியில் 32 கழக அணிகள் பங்குபற்றின என்பது குறிப்பிடத்தக்கது. [உ-165-118]

### மூவரை..

[1 ஆம் பக்க தொடர்ச்சி]

வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய இரு இடங்களைச் சேர்ந்த இந்த மூவரும் கொழும்பில் வசித்து வருவதாகவும். தற்போது இவர்கள் போதைப் பொருள்களை எடுத்துவருவதற்காக தமிழ் நாட்டுக்குச் சென்றிருப்பதாகவும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-5)

### ஹமில்டன்..

[1 ஆம் பக்க தொடர்ச்சி]

புலிகள் மீது மீண்டும் தாக்குதலை நடத்துவோமென இலங்கை இராணுவம் வீராப்பு பேசினால் உலகின் அனுதாபமும் ஆதரவும் புலிகளுக்குக் கிடைக்கும் என்று கூறப்பட்டுள்ளது [அ-10]

### பாடசாலை..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளது.

தற்போது ஜி சீ ஈ. பரீட்சை நிலையங்களாக இருக்கும் பாடசாலைகளும் எதிர்வரும் மே 4 ஆம் திகதியே மீண்டும் ஆரம்பமாகும்.

இப்பாடசாலைகள் முதலாம் தவணையில் இழந்த நாட்களை ஈடுசெய்யும் முகமாக விடுமுறை நாட்களில் பாடசாலைகளை நடத்துவதன் மூலம் மீதி நாட்களை ஈடுசெய்ய வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது.

## மரண அறிவித்தல்கள்

### ஆறுமுகம் தர்மலிங்கம்

மானிப்பாய், சுதுமலையைச் சேர்ந்த ஆறுமுகம் தர்மலிங்கம் காலமானார். இவர் காந்திமதியின் அன்புக் கணவரும், தர்மகுலேந்திரன் [லிகிதர், கச்சேரி, கிளிநொச்சி], கனகநாயகம் சரோஜினி [அமெரிக்கா], இராஜகுலேந்திரன் [சவூதி], இந்துமதி, குமாரகுலேந்திரன் [இங்கிலாந்து] ஆகியோரின் அன்புத் தந்தையும், தர்மகுலேந்திரன் ராதா, முருகேசு கனகநாயகம் [அமெரிக்கா] ஆகியோரின் அன்பு மாமனாரும், தர்சிகா, திலக்ஷன், பிரிந்தன் [அமெரிக்கா], பிரியந்தன் [அமெரிக்கா] ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் பூதவுடல் 5-4-92 இன்று பிற்பகல் இரண்டு மணிக்கு தகனக் கிரியைகளுக்காக தாவடி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி தர்மலிங்கம் காந்திமதி

சுதுமலை மத்தி [மதவடி],
சுதுமலை, மானிப்பாய்.
[20363]

### கணேசலிங்கம் தெய்வநாயகி

இணுவில் மேற்கு கணேசலிங்கம் தெய்வநாயகி 04-04-92 நேற்று சிவபதமடைந்தார். இவர் கந்தையா கணேசலிங்கம் (ஓய்வு பெற்ற O. A. T கட்டிடத் திணைக்களம், கொக்குவில்) அவர்களின் அன்பு மனைவியும், சரவணபவன் (பொறியியலாளர், கமநலத் திணைக்களம், திருகோணமலை), சுதாமதி, குகானந்தபவன் ஆகியோரின் அன்புத் தாயாரும், கோடீஸ்வரன், புஸ்பராணி ஆகியோரின் அன்பு மாமியாரும், சிவகுமார் (தாவடி தமிழ் கலவன் பாடசாலை ஆசிரியர்) அவர்களின் சகோதரியும், சந்திராதேவியின் மைத்துனியும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 05-04-92 இன்று பிற்பகல் 1 மணியளவில் ''சரவண வனம்'' இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காரைக்கால் மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. கோடீஸ்வரன்

கந்தசாமி கோவிலடி,
இணுவில் மேற்கு.
(20364)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org